**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆனித் திங்கள் 02–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 16–ம் நாள் செவ்வாய்க்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 234/2008**

**CNR.No.TNMY07–000045–2008**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, கீழஆத்துக்குடி சர்ச் தெருவில் குடியிருந்து வரும் திரு. சக்திமோகன் அவர்களுடைய துணைவியார் சுமார் 58 வயதுள்ள வீட்டுக்குடித்தனம் எஸ். தமிழ்முல்லை. **...வாதி**

**...எதிர்...**

1. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, திருவெண்காடு கிராமம் மாரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த சந்திரகாசு அவர்கள் மகன் சுமார் 35 வயதுள்ள பிரதாப்.
2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, வட்ட வழங்கல் அலுவலகத்தில் பணிபுரியும் வட்ட வழங்கல் அலுவலர்.
3. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர்.
4. நாகப்பட்டினம் மாவட்டம் ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பணிபுரியும் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக.
5. சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சென்னை தேனாம்பேட்டை – 361 அண்ணாசாலை மாநில கணக்காயர் அலுவலகத்தில் பணிபுரியும் மாநில கணக்காயர் மூலமாக. **...பிரதிவாதிகள்**

வாதியின் மகளான இறந்த புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீடுகளை 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் கொடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி, இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 15.10.2008 |

| | |
|---|---|
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 15.10.2008 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 25.10.2006ம் தேதியில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதியின் பொருமானம் ரூ.1000/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.75/- நீ.ம.க.ச பிரிவு 27(சி) படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 08.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ராஜேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

<u>**தீர்ப்பாணை**</u>

1. இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

<u>**தீர்ப்பாணை**</u>
அசல் வழக்கு எண்.234/2008
நாள்.16.06.2026.